பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 12 2024 THURSDAY 6 30 PM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்ற நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்றும் பாதிக்கப்பட்டன.
- தமிழகத்தில் ஆயிரத்து 338 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- தேசிய ஆயுஷ் இயக்கத்தை தமிழகம் சிறப்பாக செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.
- ஆசிய மகளிர் Roll Ball சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

>>>>><<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாரத் ரத்னா அம்பேத்கர் குறித்து தெரிவித்த கருத்து தொடர்பான பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், இப்பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக முதலில் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர், பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்குச் சென்று முழக்கமிட்டனர்.

சிலர், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இருக்கைக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்,

இதனையடுத்து, அவை நடவடிக்கைகள் நாள் முழுமைக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

இதேபோல், மாநிலங்களவையிலும் இப்பிரச்சினை தொடர்பாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பிஜேபி உறுப்பினர்கள் இருவர் காயமடைந்தது குறித்து, மாநிலங்களவையில் பிரச்சினை எழுப்பப்பட்டது.

பிஜேபி உறுப்பினர் செல்வி. Phangnon Konyak பேசுகையில், போராட்டத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி நடந்து கொண்ட விதம் தமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக குறை கூறினார்.

இதற்காக, திரு. ராகுல் காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் திரு. ராகுல் காந்தி செயல்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவை முன்னவர் திரு. ஜெ.பி. நட்டாவும் இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பேசிய திமுக உறுப்பினர் திரு. திருச்சி சிவா, திரு. ராகுல் காந்திக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்தார்.

திரு. ராகுல் காந்தியை நாடாளுமன்றத்திற்குள் நுழையவிடாமல் சிலர் தள்ளியதாகவும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, மாநிலங்களவை நடவடிக்கைகளும் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையே, நாடாளுமன்ற வளாகத்தில் பிஜேபி உறுப்பினர் திரு. சாரங்கியை தள்ளிவிட்டு, எதிர்க்கட்சி தலைவர் திரு. ராகுல் காந்தி காயத்தை ஏற்படுத்தியதாகவும் இதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஆயிரத்து 338 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், வாலாஜாபேட்டை - ராணிப்பேட்டை இடையே 28 கிலோமீட்டர் தொலைவுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வழிச்சாலையாக இது அமையவுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழித்தடத்தில் 4 மேம்பாலங்கள் மற்றும் 2 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து, பெங்களூரு, திருப்பதி மற்றும் வேலூர் நகரங்களுக்கு செல்ல இந்த திட்டம் உதவிடும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

>>>>><<<<<

தேசிய ஆயுஷ் இயக்கத்தை தமிழகம் சிறப்பாக செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

தேசிய சித்த மருத்துவ தினத்தை ஒட்டி, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்திய மருத்துவ முறைகளுக்கென தனி அமைச்சகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தான் ஏற்படுத்தியதாக அவர் கூறினார்.

கோவிட் காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் சித்த மருத்துவ முறைகள் மிகுந்த பயனளித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஆயுஷ்துறை செயலர் திரு. Vaidya Rajesh Kotecha, ஆயுஷ் மருத்துவ முறை நன்மைகளை தெரிந்து கொள்ளும் வகையில், 22 செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>>><<<<<

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மா. சு 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பஹ்ரைன் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரையை சேர்ந்த 28 மீனவர்கள் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தாயகம் திரும்பியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, தமிழக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, மீனவர்களின் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

>>>>><<<<<

மார்கழி மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வண்ண கோலப்பொடி தயாரிக்கும் பணிகள் மதுரையில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மதுரை சிம்மக்கல் பகுதியில் பெண்கள் இப்பணியில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ரகுராஜா – 38 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

*மாவட்டச் செய்திகள்*

தேனி மாவட்டம் வழியாக சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் நாளை முதல் அடுத்த மாதம் 15-ஆம் தேதிவரை, கம்பம், மெட்டு வழியாகவும், தரிசனம் முடித்து திரும்பும் வாகனங்கள் குமுளி மலைப்பாதை வழியாகவும் பயணம் மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி ஷஜீவனா கூறியுள்ளார்.

>>>>><<<<<

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளியில் ஆட்சியர் திரு ரத்னசாமி இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அரசு தலைமை மருத்துவமனையில் தேசிய சித்தா தினத்தை முன்னிட்டு, மூலிகை செடிகளின் பயன்கள் குறித்த கண்காட்சி நடைபெற்றது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில், சமூக பொறுப்புத் திட்டம் தொடர்பாக, பெரு நிறுவனங்களுடான கலந்தாய்வுக் கூட்டம், ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலக்கும் இடங்களில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. இளம்பகவத் கூறியுள்ளார்.

>>>>><<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய மகளிர் Roll Ball சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

கோவாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் ஈரானை வென்றது.

>>>>><<<<<

மும்பை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Akanksha Salunkhe காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 11-8, 8-11, 8-11, 12-10 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Tanvi Khanna –வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Rahul Baitha இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 11-8, 11-7 என்ற செட் கணக்கில், இலங்கையின் Nilakshana Herath –ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Abhishek Pradhan-னும் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

>>>>><<<<<

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – Prarthana Thombare இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

>>>>><<<<<

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி, பாகிஸ்தான் மற்றும் பங்கேற்கும் நாடுகள் ஏற்றுக்கொள்ளும் மற்றொரு நாட்டில் நடைபெறும் என்று ஐசிசி அறிவித்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் இடையேயான போட்டிகள், வேறொரு நாட்டில் நடைபெறும் என்றும் ஐசிசி கூறியுள்ளது.

இந்த நடைமுறை 2027ஆம் ஆண்டுவரை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற குகேஷை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து தமிழக ஆளுநர் திரு. ஆர்.என், ரவி பாராட்டு தெரிவித்தார்.

>>>>>END<<<<<